# குமரி அறிவியல் பேரவை

# இளம் விஞ்ஞானிகள் பயிற்சி முகாம்

முக்கடலும் முத்தமிடும் குமரியிலே
வயல்கள் நிறைந்த நாஞ்சில்நகரினிலே
மலைகள் சூழ்ந்த ராமனாதிச்சம்புதூரிலே
இளம் விஞ்ஞானிகள் சூழ நடந்த

## ***Scientific Awareness Camp*** ன் அறிக்கை



வான்வெளியை ஆதாரமாகக் கொண்டு, மழை நீராய்ப் பொழிந்து, மலைகளில் வழிந்தோடி, ஆறாகப் பாயும் நீர், நிலங்களையெல்லாம் தொட்டுத் தாலாட்டி அழகான இசையுடனே பாய்ந்து, சிறப்பாகக் கடலில் கலக்கிறது. எனவே இவற்றை நினைவில் கொண்டுதான் போலும் எங்கள் 60 இளம் விஞ்ஞானிகளையும் நிலம், அண்டவெளி **(Space)** , மலை, ஆறு மற்றும் கடல் என்று அணிக்கு 12 பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்தனர். எங்களின் முதல் நிகழ்ச்சி 14.11.09 அன்று நாகர்கோவில் உடுப்பி ஹோட்டல் அருகில் ஆரம்பமானது.



நீல வானத்தைக் கிழித்துக் கொண்டு சூரியனின் ஒளிக்கதிர்கள் சுந்தர பூமியில் நன்கு பட்டு ஒளிபடர்ந்து கொண்டிருந்த காலை 8மணியளவில் நாங்கள் 60 பேரும் கல்லூரிப் பேருந்தில் ஏறி இயற்கை காட்சிகளை ரசித்த வண்ணமே 8.30 மணியளவிலேயே **Lord Jeganaath College of Engineering and Technology** கல்லூரியை அடைந்தோம். எங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உணவு எங்கள் இளம் விஞ்ஞானிகளின் அண்டவெளி **(Space)** அணியால் பரிமாறப்பட்டது. 9 மணிக்கு அளவில் இயற்கையை பாதுகாப்பதற்காக மரம் நடுதல் நிகழ்வு நடைபெற்றது. அதன்பின் சுமார் 10 மணிக்கு **Dr. சுயம்பு** அவர்களின் குத்துவிளக்கு ஏற்றுதலுடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. முதலாவதாக அண்டவெளி அணியைச் சேர்ந்த அஜித்திராவால் நிகழ்ச்சியின் முதல் துவக்கம் வாசிக்கப்பட்டு கல்லூரி முதல்வர் **Dr. சசிகுமார்** அவர்கள் இனியதொரு வரவேற்பரை

வழங்க, **திரு. முள்ளஞ்சேரி வேலையன்** அவர்கள் தொடக்க உரை நிகழ்த்தினார்கள். அவர்களது உரையில் எட்வர்டு ஜென்னரின் பெரியம்மை நோய் தடுப்பு மருந்து கண்டுபிடித்ததிற்கான சூழல்பற்றிய தகவல் இருந்தது. பின்னர் மார்த்தாண்டம் கல்லூரியின் துணைத் தலைவர் **திரு. ஜேம்ஸ் வில்சன்** அவர்கள் பூமி வெப்பமடைவதைப்பற்றி பேசியது எங்கள் சிந்தையைத் தூண்டியது. பின்னர் விஞ்ஞானி **திரு. முருகன்** அவர்கள் கூறுகையில் எண்ணிப் பார்ப்பதுடன், செய்யவும் தூண்டும் கருத்துக்களை மிகவும் அழகாக கூறினார்கள்.






பின்னர் **திரு. சுந்தர்ராஜு I.F.S** அவர்கள் பேசும் போது நமது பூமியின் 5 வகையான நிலங்கள் பற்றிக் கூறியது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. பின்னர் கல்லூரியின் ஆராய்ச்சி மைய இயக்குநர் **Dr. ஜேம்ஸ் ஆர். டேனியல்** அவர்கள் நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானிகளை குறித்து கேள்விகள் எழுப்பி சிந்தனையைத் தூண்ட **" Life's battles do not always go to the stronger or the fastest one. Sooner or later the man who wins is the man who thinks who can"** என்று கூறியது எங்கள் உள்ளங்களில் ஒலித்து கொண்டிருக்கிறது. மேலும் கல்லூரியின் இயக்குநர் **Dr. ராபர்ட் சிங்** அவர்கள் குறிக்கோளின் இலக்கை அடைவதற்கான வழிகளை அருமையாக எடுத்து உரைத்தாகள். அதன்பின் திரு. விக்ரம் அவர்கள் இந்திய விஞ்ஞானிகள் பற்றிய தொகுப்பினைக் கூறியது மன நிறைவாக இருந்தது.

மாலை நிகழ்வினை கடல் அணியை சேர்ந்த செல்வி **ரிஜூ மோகன்** அவர்கள் தொகுத்து வழங்க, மூத்த விஞ்ஞானி **திரு. இங்கர் சால்,** விஞ்ஞானம் என்றால் என்ன? யார் விஞ்ஞானி? என்ற கேள்விகளுக்கு இனிய விளக்கத்தை கூறி **"Change is the only word that does not change"** என்ற மேற்கோளுடன் எங்களை பரவசப்படுத்தின்ார்கள். மூத்த விஞ்ஞானி **திரு. பி. பால்வண்ணன்** அவர்கள், தமது உரையில் **Plannet Earth** குறித்தும் அதற்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக்கள் குறித்தும்



அதற்காக நாம் செய்ய வேண்டிய கடமைகள் குறித்தும் நல்லதொரு ஆலோசனை வழங்கினார்கள். மூன்று மணி அளவில் நடந்த குழு விவாதத்தில் ஒவ்வொரு இளம் விஞ்ஞானிக்கும் கொடுக்கப்பட்ட தலைப்புகள் குறித்தும் அதற்கு செய்ய வேண்டிய ஆயத்தம் குறித்தும் விவாதிக்கப்பட்டது. தொடர்ந்து **"நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் காரணமானவர்கள் ஆசிரியர்கள், அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், ஆற்றல் மிக இளைஞர்கள் அல்லது விஞ்ஞானிகள்"** என்னும் தலைப்பில் நடந்த விவாத அரங்கில் எங்கள் எண்ணங்களை எடுத்துரைக்க சிறந்த வாய்ப்பு கிட்டியது. பின்னர் அகில இந்திய வானொலி மையத்தைச் சார்ந்த மங்காவிளை **D. ராஜேந்திரன்** அவர்கள் இனிய வாழ்த்துரை வழங்க ஓய்வு பெற்ற மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரி **திரு. S. திருவேங்கடம்** அவர்கள் **"வாய்ப்புகள்"** என்ற தலைப்பில் ஆற்றிய உரை எங்களுக்கெல்லாம் இனிய வாய்ப்பாக அமைந்தது. அதை தொடர்ந்து ஆறு அணியினர் நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்த, திரு.விக்ரம் அவர்கள் **Leadership quality and Personality development,** என்ற தலைப்பில் பல நல்ல கருத்துக்களை வழங்கினார்கள். **Leadership is action not position** என்ற விளக்கம் உண்மையிலேயே எங்களை புரிப்படைய செய்தது. தொடர்ந்து **திரு. ராபர்ட் குமார்** அவர்கள் **"உனக்குள் விஞ்ஞானி"** என்ற தலைப்பில் ஆற்றிய உரை மனதில் நீங்கா இடத்தை பிடித்து விட்டது.



**"Living is simple,**

**Loving is also simple,**

**Laughing is very simple,**

**Winning is too simple,**

**But being simple is too difficult. "**

என்ற கருத்து சிந்தனையைத் தூண்டியது. தொடர்ந்து இரவு உணவிற்கு பின் நடந்த கலைநிகழ்ச்சியில் கல்லூரி மாணவ மாணவிகள் திரளாக கலந்து கொண்டு பலத்த கரகோசத்துடன் எங்களை உற்சாகப்படுத்தியது என்றுமே மறக்கமுடியாதது.



15.11.2009 அன்று காலை 5மணிக்கு துயில் எழுந்த எங்களுக்கு **திரு. சதிஸ்குமார்** ஆசிரியர் அவர்கள் வழிகாட்டுதலில் யோக பயிற்சி நடைபெற்றது. பின் 8.30 மணியளவில் கல்லூரி வளாகத்தில் சென்று ஆய்வு நடத்தி பலவித பொருள்களை சேகரித்து வந்து விளக்கினோம். பின்னர் ஆய்வகத்திற்கு அழைத்து செல்லப்பட்ட எங்களுக்கு கணிப்பொறி பற்றியும் இண்டர்நெட் பற்றியும் விளக்கங்களுடன்

பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் பலவித எந்திரங்களின் செயல்பாடுகள் செயல் விளக்கத்துடன் செய்து காட்டப்பட்டது. புத்தகத்தில் படித்து நிழல் உலகத்திலிருந்த எங்களை நிஜ உலகத்திற்கு கொண்டு சென்ற Lord Jeganath Engineering College ஆசிரியர்களுக்கு எப்படி நன்றி சொல்லுவது தகும்? **விஞ்ஞானி திரு. பென்சிகர் ராஜன்** அவர்கள் ராக்கெட் பற்றியும் அதை ஏவுதல் பற்றியும் படத்துடன் கூறிய விளக்கங்களை கேட்டு மெய்மறந்து போனோம். நிலம் அணியினரின் அறிக்கையை தொடர்ந்து மலை அணியினர் மாலை நிகழ்ச்சியை தொகுத்து வழங்க 5 அணியினரும் பயிற்சி முகாமின் முழு அறிக்கையை ஒவ்வொருவராக சமர்ப்பித்தனர். **டாக்டர். சசிகுமார்** கல்லூரி முதல்வர் அவர்கள் நிகழ்ச்சியில் தலைமை தாங்க **திரு. எட்வின் சாம்** அவர்கள் இனி வரும் நிகழ்ச்சிகளை குறித்த அறிவிப்புகளை வெளியிட்டார்கள். திரு. சாம்ராஜ் தலைமை ஆசிரியர் அரசு தொடக்க பள்ளி மிடாலக்காடு அவர்கள் , **"புதிய இந்தியாவில் இனி யொரு விதி செய்வோம"** என்ற தலைப்பில் இனியதொரு உரையாற்றினார்கள். **திரு. வேலையன்** அவர்கள் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் மாலை 4.30 மணிக்கு விழா நிறைபெற கல்லூரி வாகனத்தில் இல்லங்கள நோக்கி இனிய பயணங்கள் மேற்கொணடோம்

***R.P. SumiKrishna & V.H. Beautlin***

***Seam Team.***